பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

DUPLICATE

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஷ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | காற்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மறுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ருடு. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஸு ஐப்பசிமீ உஎஉ (1923 நவம்பர் 12) திங்கட்கிழமை { இலக்கம்—ருரு.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்குள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

## ஸ்ரான்டேர்ட்
## கொளுக்கியோடுகள்.
## (Standard Tiles.)

இவை வேரேக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டுள் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விடத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

---

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.
### புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி முதலியன மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து தோஷம், மோகினியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், கோட்டாஸ், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

---

உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

### மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

### மூலத்திற்கு
### குருநாகபஸ்பம்

ஆப்ரேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### இருமலுக்கு
### குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவுகாலப்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

### பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மெடல்கள் பெற்ற

C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.

---

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

### புஷ்டிக்கு கைகண்ட
### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2

### பிளேக் மாத்திரை.

சுரங்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 41.) வைத்தியசாலை, பழனி. S. I.

---

### காகிதாடா சேலை

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும் இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

### வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

---

### தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் திராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
(H. 16.) தொண்டமானாறு.

---

### "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர்களாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்றுகூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

---

சருவஞானோத்தர ஆகமம்.

### ஞானபாதம் தமிழ் மூலமும்
### முத்திரந்த விருத்தியும்.

இது ஸ்ரீகண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவசித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0.

தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்பெறும்.

☞ பொ முத்தையபிள்ளை,
சிவாகம சங்கம்,
(H. 20) தேவகோட்டை.

---

### ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் சோலைலம்பூர் 'ஸ்கொத்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்குயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குலத்தைச்சேர்ந்தவராயுமிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரிய தரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
(Q. 45) காரியதரிசி.

---

## பத்திரிகாபிமானிகள்
## தங்களால் வரவேண்டிய
## பத்திரக் கிரயத்தைத்
## தயைசெய்து காலதாமச
## மின்றி அனுப்பிவைப்
## பார்களாக.

---

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!
விலைசரசம்! உடைநயம்!! அருமையானதினுசு!!!

## சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்காணுக்களும், நயம் 120 செ. 100 செ. 80 செ. நூலில் பலகலர் பட்டினுலும் வெள்ளி ஜரிகையினுலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினுலும் ஜரிகையினுலும் பலவிதமான மூக்கிகள்போட்டதும் மூக்கிலிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமூக்கியில் ஜரிகையினுல் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் செவு அழுத்தமாகவும் நேட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம், ஜவுளி சேலம், Javuli Salem. } கா கோ. அ. வெ. கு. ஓபுளிசெட்டியார் & Co., ஜவுளிவியாபாரம் கொசை சேலம்.

(Q. 44)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோத்காரிஸு ஐப்பசிமீ 27ௗ திங்கட்கிழமை.


## மதுவிலக்கு.

உலகின் மற்றப்பாகங்களிற் போலவே நமது தேசத்திலும் மதுபானத்தினால் சொலற்கரும் பெருந் தீமைகள் பெருகி வந்தன. இலங்கையில் பஞ்சமாபாதகங்களுள் முதலானதென் றெண்ணப்படும் கொலை மிகக்குரூரமானவகையாயும் அதிக நெருக்கமாகவும் நடைபெறுவதற்கு மதுபானமே விசேட காரணமென்பது நிச்சயம். கொலையொழிந்த மற்றப் பாதகங்களுக்கும் வெறிப் பதார்த்தங்களை அருந்தலே பிரதானமான காரணமென்பது தெள்ளிதிற் புலப்படக் கிடக்கின்றது. இவ்வளவு தீமைக்கும் துர்ப்பாக்கியத்திற்குங் காரணமாயிருக்கும் மதுபானத்தைத் தேசாபிமானிகள் நமது தேசத்திலிருந்து முற்றாய் நீக்கிவிடுதற்கு அதிக பிரயாசப்படுவது நூதனமன்று. மதுபானம் நீங்க, அதனால் வருஞ் சகல தீமைகளும் நிர்ப்பந்தங்களும் நீங்குமே தேசத்தில் நன்மையும் நீதியும் சகல பாக்கியமும் விர்த்தியாகுமே யென்று தேசாபிமானிகள் கடும் முயற்சி புரிந்து அநேக கள்ளுத் தவறணைகளையும் சாராயத் தவறணைகளையும் நீக்கியிருக்கின்றனர். இதனால் நமது தேசமதுக்குடியரிற் பெரும்பாலார் தமது இஷ்டப் பிரகாரம் கள் சாராயம் என்னும் குடிவகைகளை வாங்கியுண்ணும் வசதிகள் இல்லாதவரா யிருக்கின்றனர். இவ்வகையாய் மதுபானத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் தேசத்தில் மிகவுங் குறைந்திருப்பது ஒரு பெரும் நன்மைதான். ஆயின் மதுக்கடைகள் பலவற்றை நீக்கிய பின்னும் மதுபானஞ்செய்யுந் துர்ப்பழக்கமுடையோர் யாதோ ஒருகள்ளவகையாய் மதுபானஞ் செய்து அதனால் வரும் பெருந் தீமைகளுக்குத் தம்மையுந் தம்மைச் சேர்ந்தோரையும் ஆளாக்குவரேல் தவறணைகளை நீக்கியதனால் வந்தநன்மை பெயரளவினதேயாகுமன்றோ? ஆதலின் தவறணைகளை நீக்குவதற்குப் பெருமுயற்சி புரிந்த பெரியோர் அவை நீங்கியபின், மதுக்குடியர் கள்ளமாய் மதுபானங்களை எவ்வகையாயும்பெற்றுக்கொள்ளாதுதடுத்தல் அவர்மேற் பொறுத்த கடனென்றது. தவறணைகள் நீக்கப்பட்ட இடங்களில் பனைகளிலும் தெங்குகளிலும் களவாய்க் கள் சேர்த்தலும் சாராயம் வடித்தலும் பிற இடங்களிலிருந்து இக்குடிவகைகளைக் கொண்டுவந்து வீடுகளில் வைத்துக் கள்ளமாய் விற்றலுமே மதுபானப்பிரியர் கைபரும் கள்ளவழிகள். இவைகளைத் தடுக்கத் தவறணை நீக்கியவர்கள் முன்வந்து உதவி செய்யாவிடில் அரசினர் அதில் அனுகூலப்படுவது கஷ்டமாயிருக்கும். ஆதலால் மதுவிலக்கு விஷயத்தில் தக்க கரிசனை காட்டித் தவறணைகளை நீக்கிய தேசோபகாரிகள், தவறணைகளை நீக்கிய அளவில் மாத்திரம் திருப்தி கொள்ளாமல் மதுக்குடியர் தமது கெட்ட அபேட்சையைப் பூர்த்திசெய்தற்குப் பிரயோகிக்கும் எல்லாக் கள்ள உபாயங்களையும் அழித்தல்வேண்டும். அப்படிச் செய்யாது மவுனமாயிருந்தால் தவறணைகளை நீக்கியதில் தக்க பிரயோசனம் ஒன்றும் இன்றென்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

தவறணைகள் நீங்கிய இடங்களில் களவாய்க் கள் சேர்த்து விற்கப்படுவதையும் சாராயம் களவாய் விற்கப்படுவதையும் அறிந்த சில மதுபரிபாலன உத்தியோகத்தர் அத் தீச்செயல்களை ஆதாரமாகக் கொண்டு அவை நிகழும் இடங்களில் மறுபடியும் தவறணைகள் திறக்க வழிபார்க்கின்றார்கள். இதனால் மதுவிலக்கு விஷயத்தில் நல்லூழியம் புரிந்து தவறணைகளை நீக்குதற்குப் பெருங் கருவியாயிருந்தவர்கள் தமது கடமையைப்பற்றிப் போதிய அளவாய் உணரவேண்டியவர்களா யிருக்கின்றனர். மதுபானங்களில் களவாய் வியாபாரம் நடத்துவதைத் தடுப்பதற்கு அரசாட்சி உத்தியோகத்தரைத் தூண்டிவிட்டு அவர்களுக்குத் தகுந்த உதவிசெய்வதுமாத்திரமன்றி மதுபானஞ் செய்பவர்கள் தங்கள் தீய பழக்கத்தை முற்றாய் விட்டு நீங்கும்படி அவர்களுக்கு நற்போதனைசெய்து நல்ல ஊக்கத்தைக் கொடுக்க வேண்டும்.

மதுவிலக்கு விஷயத்தில் வித்தியாசாலைகளிலும் பொதுச் சனங்களுக்குள்ளும் தகுந்த போதனையூழியம் செய்யப்படவேண்டும். மதுபானஞ் செய்தல் என்னும் கொடிய பழக்கத்தினால் வருங் கேடுகளையுந் துர்ப்பாக்கியங்களையும் நஷ்டங்களையும் எடுத்துக்காட்டித் தேககசுகம் மனோசுகம் ஆன்மசுகம் என்னும் மூன்று சுகங்களையும் பாதுகாத்து எய்தற்கரிய பிறவியாகிய இம்மானுடப் பிறவியில் பெறற்பாலனவாகிய எந்தச் சிலாக்கியங்களையும் அடைதற்கு மதுபானம் முற்றாய்த் தவிர்க்கப்பட வேண்டுமென்பது எல்லாருடைய மனங்களிலும் நன்கு பதியத்தக்க போதனை ஓய்வின்றிச் செய்யப்படல்வேண்டும். இவ்வகையான விசேஷ போதனை முயற்சி சனங்களுக்குள் நடத்தப்படவில்லை என்று அரசாட்சி உத்தியோகத்தருங் குறை கூறுகின்றனர். தவறணைகளை நீக்கும் விஷயத்தில் மாத்திரம் பெருமுயற்சி செய்து மற்றப் பிரதான காரியங்களை அசட்டை செய்தால் யார்தான் குறை கூறார்? ஆனால் மெய்யான தேசாபிமானமுள்ளவர்கள் மதுவிஷயத்தில் எல்லாவகையான முயற்சிகளையுந் தக்கவாறு புரிந்து மதுபானமென்னும் கொடிய நஞ்சை நமது தேசத்திலிருந்து முற்றாய் நீக்கிவிடுவார்கள் என்று காத்திருக்கின்றோம். பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் இத்திவ்விய ஊழியத்தைச் செய்பவர் யாவர்க்கும் தமது திருவருளின் ஒத்தாசையைப் பூரணமாயனுக்கிரகிப்பாராக.

## அந்நியநாட்டுக் குடிவகைகள்.

(Communicated.)

சென்ற சில வருடங்களாக இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள மதுக்கடைகளை அகற்றி மதுபானத்தைத் தவிர்ப்பதற்காகச் சிறந்த எத்தனங்கள் நடந்து வருகின்றன. சிங்கள நாடுகளில் இம்முயற்சி மிகுந்த அனுகூல மடைந்துவந்திருக்கின்றது. அவ்வாறே யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலுமுள்ளவருடைய ஊக்கத்தினால் யாழ்ப்பாணத்துச் சில பகுதிகளில் ஒருவகையான மதுக்கடைகளு மில்லாமல் ஒழிக்கப்பட்டன. வலிகாமம் வடக்குந் தென்மராட்சிப் பகுதி இவைகள் இதற்குச் சான்றாம். இன்னுஞ் சில பகுதிகளில் இடைவிடா முயற்சி நடந்துவருகின்றது. இம்முயற்சிகள் நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட படியினால் நல்ல முடிவுக்கு வருமென்பதே துணிபு. யாழ்ப்பாண நகரவெல்லைக்குள்ளும் நான்காம் ஏழாம் பிரிவுகளிலுள்ள கள்ளுச் சாராயத் தவறணைகளை யகற்றுவதற்கு ஒழுங்குகள் நடந்து வருகின்றனவென்று இப்பத்திரிகையில் முன்னுங் கூறப்பட்டுள்ளன. வருஞ் சனிக்கிழமை தலைவரிப்பணங் கொடுப்பவருடைய சம்மதங் கேட்கப்படும். அப்பொழுது அபிமானிகளொவ்வொருவரும் சமயபேதத்தை அல்லது மற்றெவ்வகை வித்தியாசங்களையும் பாராட்டாது தாங்கள் இயன்ற முயற்சிகளைச் செய்து கருமத்தை யநுகூலமாகச்செய்வார்களென்று கூறவேண்டுவதில்லை.

இதுநிற்க, நிகழும் டிசம்பர் (மார்கழி) மாசம் ஐந்தாந் தேதியன்று அந்நியநாட்டுக் குடிவகைகளை விற்குஞ் சாய்ப்புகளை மூடுவதற்குப் பட்டணத்தின் எல்லைக்குளிருக்கும் தலைவரிப்பணங் கொடுப்போர் வந்து தங்கள் சம்மதத்தைத் தெரிவிக்குமாறு அரசாங்கத்தார் ஒருவிளம்பரத்தை வெளியிட்டிருக்கின்றார்கள். இது மிகவும் பிரதானமான ஒரு விஷயம். இவ்விஷயத்தில் அரசாட்சியாரே சனங்களின் மனுவால் அல்லது வேண்டுகோளால் ஏவப்படாது தாமாய்த் தொடங்கினது என்றும் பாராட்டப்படக்கூடிய காரியமாகும். இதுவுமல்லாமல் பட்டண வெல்லைக்குள் பலவிடங்களையேற்படுத்தி அப்பல ஸ்தானங்களிலும் சம்மதங் கொடுக்கலாமென உத்தரவிட்டிருக்கிறார்கள். இதுவும் ஓர் பெரும் உதவியன்றோ. இன்னும் பட்டின பரிபாலன சங்கத்தார் இவ்விஷயத்திற் சில சகாயங்கள் செய்திருக்கின்றார்கள். அவற்றுட் பிரதானமாக நாம் எடுத்துக் காட்டவேண்டிய தொன்றுண்டு. தலைவரிப்பணங் கொடுத்துப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைப் பவுத்திரமாக ஒருவரும் வைத்திருக்கிறதில்லை. பலர்பற்றுச்சீட்டை வாங்காமலே விட்டுவிடுகிறதுண்டு. இன்னும் அநேகர் பற்றுச்சீட்டை யிழந்துவிடுவது வழக்கம். ஒருபோது சிலருட் சிலர் பற்றுச் சீட்டைக் காப்பாற்றிவைத்திருப்பார்கள். ஆனால் இது ஏகதேசமாய்க் காணப்படும். ஆகையாற் பெரும்பாலும் பற்றுச்சீட்டை நாம் இழந்துவிடுவதுதான் சகசம். இப்பற்றுச்சீட் டில்லாமல் தன் வாக்குரிமையை ஒருவன் பிரயோகிக்கக் கூடாது. அவ்வாறு பற்றுச்சீட்டை யிழந்தோர் ஒவ்வொருவரும் திரும்பவும் இம்மாகாணத் தலைவரிடம் கடுதாசிகொடுத்து மனுப்பண்ணி ஒரு பிரதி பெற்றுக் கொள்ளலாம். யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் ஏறக்குறையப் பதினாயிரஞ் சனங்கள் வாக்காளரா யிருக்கிறார்கள். இவர்களுட் பெரும்பான்மையோர் பற்றுச் சீட்டுப் பிரதிகளைப் பெறுவதற்குச் செலவழிக்கவேண்டிய பணமும் நேரமும் அலைச்சலும் இவ்வளவு என்று சொல்ல முடியாது. பட்டினபரிபாலனசங்கத்தார் இதையறிந்து ஒவ்வொரு பிரதியும் ஆறு சதத்திற்குக்கொடுக்கப்படுமென்றும், அப்பிரதிகளை வரிகொடுப்போர் ஒவ்வொருவரும் தனித்தனி மனுப்பண்ணாது பலர் சேர்ந்து மனுப்பண்ணினாற் போதுமென்றும் உத்தரவு செய்திருக்கிறார்கள். இவ்வாறு செய்த அவர்களின் இச்செயல் நன்கு பாராட்டப்படற்பாலது.

இவ்வகை வசதிகளெல்லாம் ஏற்பட்டிருக்கும் இப்பொழுது அந்நிய நாட்டுக் குடிவகைக்கடைகளை யகற்றுவது மிகவும் சுகமான வேலையெனப் புலப்படுகின்றது. அந்நிய நாட்டுக் குடிவகைகளினால் விளையுந் தீமை பல. இதைப்பற்றி மற்றமுறை எடுத்துரைப்பாம்.

## சமாசாரம்.

காலநிலை:—பகற்காலங்களில் சூரியனுடைய ஒளியின்றி ஆகாயம் முகில்களால் மூடப்பட்டிருக்கிறது. இரவில் பனி அதிகம். நெல்வயல்கள் இப்பொழுது நனனிலையிலிருந்தாலும் இடையிடையே மழை அவசியம் வேண்டியதாயிருக்கிறது.

கிராம கிருஷிக கைத்தொழிற் காட்சி.— வலிகாமம் மேற்கு வடக்குப் பகுதிகளில் மேற்படி பொருள்களின் காட்சியொன்று அடுத்த ஜூன் மாசம் நடைபெறுமாம்.

மற்றிக்குலேஷன்பரீட்சை:—சென்றஜூனிமீ இலங்கையிலே நடந்த லண்டன் சர்வசலாசாலையின் மற்றிக்குலேஷன்பரீட்சைக்குச் சென்றவருள்ளே 23 பேர் அரங்கேறியிருக்கின்றார்கள். இவர்களுள் 9 பேர் தமிழர்.

பகிரங்கவேலை உத்தியோகமாற்றம்:—யாழ்ப்பாணத்தில் டிஸ்திறிக் இன்சினீராக விருந்த மெஸ் ஹியூஸ் என்பவர் திருக்கோணமலைக்கு மாற்றப்பட அவருடைய இடத்திற்கு, காலியிலிருந்த மெஸ் நதானியேல்ஸ் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

மாடு களவாடல்:—புலோப்பழையைச் சேர்ந்த சிலநட்டாமுட்டிகள் மீசாலை சரசாலை என்னுங் கிராமங்களுக்குச் சென்று நாலு பசுக்களைக் களவாடித் தங்கள் கிராமத்துக்குக் கொண்டுபோய்த் தங்கள் பட்டிக் குறிகளை அவைகளுக்குச் சுட்டு மறைத்து வைத்திருந்தார்கள். காரியம் வெளியாக அவர்கள் மாடுகளுடன் பிடிபட்டு, அவர்களுக்கு விரோதமாகக் கோட்டிலே வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

வட இலங்கைச் சுதேசபாஷாபிவிருத்திச் சங்கம்:—இச்சங்கத்தின் பகிரங்க கூட்டமொன்று சென்ற சனிக்கிழமை பின்னேரம் 3மணியளவில் தெல்லிப்பழை மிஷன் சாகினைப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் கௌரவ ஸ்ரீத்தியாகர்த்தர் அவர்களது சில வேண்டுகோள்களும், உபாத்திமாருக்காக ஓர் சம்ரக்ஷணசங்கம் ஸ்தாபித்தலைப்பற்றிய விஷயமுஞ் சிந்திக்கப்பட்டன. மலாய்நாட்டில் உயர்ந்த உத்தியோகத்தமர்ந்திருந்து தற்போது இளைப்பாறியிருக்கும் மெஸ். அருளையா பார்ணபஸ் அவர்கள் "சுதேசபாஷாபிவிருத்தி" என்னும் விஷயத்தில் ஓர் உபந்நியாசஞ் செய்தனர்.

கோழும்பிற் பொக்குளிப்பான்:— சென்ற சிலநாட்களுக்குள் கொழும்பு நகரிலே பெருந்தொகையான சனங்கள் பொக்குளிப்பான் நோயினாற் பீடிக்கப்பட்டிருக்கின்றனரென்றும், நோய் பரவாது தடுப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் யாவும் செய்யப்படுகின்றனவென்று மறிகின்றோம்.

சடிதி மரணம்:—சென்ற சனிக்கிழமை மருதானையிலே டன்லவோட் என்னும் றெயிற் சாரதி யாதுகாரணத்தாலோ தனது எஞ்சினில் நின்றும் இறங்கி அதைப்பார்வையிட்டுக்கொண்டு நிற்கும் போது விழுந்து இறந்தான். இருதய வியாதியே அவனின் மரணத்துக்குக் காரணமென்று சொல்லுகிறார்கள்.

வெள்ளச் சேதம்:—கொழும்புக்குச் சமீபமாய் வெலியகொடை என்னுமிடத்திலே பெருமழை பெய்து பெருவெள்ளமுண்டாய் வீடுவாசல்களெல்லாம்வெள்ளத்துள்ளேகிடக்கின்றன தொகையான சனங்கள் தங்கள் வீடுவாசலின்றி அந்தரிக்கின்றார்கள். பலர் பட்டினியாலே வருந்துகிறார்கள். மேல்மாகாண ஏசன்றர் அங்கு சென்று உணவுப் பொருளில்லாது வருந்துவார்க்கு இனமாக அரிசி கொடுத்துவருகின்றார்கள்.

உதவி வித்தியாகர்த்தர்:—உதவி வித்தியாகர்த்தராகிய மெஸ். எட்வின் இவான்ஸ் அவர்கள் சடுதியாக எழுந்த நோய் காரணமாக அவரைப் பரிசரிக்கும் வைத்தியரினால் அவருடைய சுகத்தின் நயத்திற்காகச் சீக்கிரம் இங்கிலாந்து சென்று தக்க சிகிச்சை பெறும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர். ஆதலால் அவர் லீவில் சிலதினங்களுள் இங்கிலாந்து சென்று பின் உத்தியோகத்தினின்றும் இளைப்பாறுவர். அவருக்குப் பிரியாவிடையளிப்பதற்குக் கூட்டங்கள் வைப்பதற்குரிய ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

கொட்டாஞ்சேனைச் சுடலை:—கொழும்புநகரைச்சேர்ந்த கொட்டாஞ்சேனையிலிருக்குஞ் சுடலை இந்துக்களுக்கும் புத்தசமயிகட்கும் உபயோகமாய் வெகுகாலம் அவர்களாற் பாவிக்கப்பட்டுவந்தது. இச்சுடலைக்கு மிகவுமணித்தாய் ஏராளமான சனங்கள் வாசஞ்செய்கிறபடியால் அவர்களுடைய சுகத்திற்காகச் சுடலையை நீக்க வேண்டுமென்று கொழும்பு நகராதிபத்தியசங்கத்தார் தீர்மானித்தனர். இத்தீர்ப்பினால் தங்களுக்குப் பெரும்வசதியீனம்நேரிடுமென்று சங்கத்தாருக்கு இந்துக்களும் புத்தசமயிகளும் அறிவித்துச் சுடலையை நீக்கவேண்டாமென்று கேட்டுக்கொண்டனர். சங்கத்தார் அவர் கேள்விக்கிசைந்து சுடலையை நீக்குவதில்லையென்று தீர்த்திருக்கின்றனர். ஆயின் பிரேதங்களைத் தகனிப்போர் சிலவேளைகளிற் போதிய விறகும் எண்ணெயும் பிரயோகியாததினால் அவைகள் முற்றுந் தகனிக்கப்படாமல் நாய்களாலும் காகங்களாலும் பக்ஷிக்கப்பட, அதனாலெழுந் துர்நாற்றமும் அசுத்தங்களும் சுகத்தைக் கெடுக்கின்றனவாதலின் பிரேதங்களைப் பூரணமாய்த் தகனிப்பதற்கு இந்துக்களும் புத்தசமயிகளுஞ் சேர்ந்து ஓர் நிருவாக சபையை ஏற்படுத்த வேண்டுமென்றுங் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

மாலைதீவுத் திறை:—மாலைதீவுச் சுல்தானை அரசர் வருடாவருடம் இலங்கையரசுக்குக் கொடுத்துவருந்திறையான்து ஒருதோணியிலே கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இத்திறை வருகிற 19-ந்ௗ இராணிமாளிகையிலே வழமையான சேரிமோனிகளுடன் கொடுக்கப்படும்.

மத்தளமோ; தோலாவோ:—தலவாக்கெல்லை றெயில்வேய் ஸ்ரேஷனிலே பொலிஸ்மனாக இருந்தவரும் பீற்றர் என்பவன் இரவிலே லைசென்ஸ் இல்லாது மத்தள மடித்தானென்று பொலிஸ்கோட்டிலே வழக்குவைக்கப்பட்டது பொலிஸ்கோட்டிலே பீற்றர் என்பவன் நீதிபதியைப்பார்த்து தான் தோலாவன்றி மேளமடித்ததில்லையென்று சொன்னான். நீதிபதி தோலாவை மத்தள கிரையிலே வைக்கப்படாதென்று சொல்லி அவனை நிரபராதியாக்கி விட்டார். —ச. வே பா. கா.ன.

உலகத்தைச் சுற்றி வருதல்:—உலகத்தைச் சுற்றி வரவேண்டுமென்கிற நோக்கத்துடன் 6 பாரசீக வாசிகள் கிளம்பியிருக்கிறார்கள். அவர்களெல்லாம் துவிச்சக்கிரவண்டியில் செல்லும் வீரர்களாவர். அவர்கள் முதல் முதலில் பம்பாயிலிருந்து பிரயாணப்பட்டு ஆக்ரா மார்க்கமாக டெல்லிக்குப்போய்ச் சேர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் இந்தியாவின் எல்லைப் புறத்தைக்கடந்து சென்று பாரசீகத்திற்குப் பிரயாணப்படுவார்கள். அவர்கள் தத்தம் துவிச்சக்கர வண்டிகளில் பிரயாணஞ்செய்கிறார்கள். அவர்கள் செல்லுகையில், தக்க இடங்களில் தங்கி அன்னஆகாராதிகளை அருந்திவிட்டு மீண்டும் பிரயாணப்படுகிறார்கள். மூன்று வருஷத்திற்குள்ளாக உலகம் முழுவதையும் சுற்றி வந்துவிடலாமென்று அவர்கள் கருதுகிறார்கள். இது ஓர் அதிசயிக்கத்தக்க முயற்சியன்றோ.

—"திராவிடன்"

## Sir. T. சதாசிவஐயரவர்கள் யாழ்ப்பாண ஆசிரிய கலாசாலைக்கு விஜயஞ்செய்தமை.

ஐப்பசிமீ 22-ந் திகதியாகிய தீபாவலி சுபதினத்தன்று இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பிரக்கியாதி பெற்ற போதிஞராகிய Sir. T. சதாசிவ ஐயரவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விஜயஞ்செய்தனர். ஆசிரியர்களும் மாணாக்கர்களும் உள்ப்படச்செய்த கவிகள் மூன்றினால் ஐயரவர்கள் சுவாகதம் (நல்வரவு) கூறப்பட்டனர். பின்னர், மாணவர்களை நோக்கி மனோதிடமும் உற்சாகமும் வாய்ந்த ஸ்ரீ பொன்னையா அவர்களை நீவிர் அதிபராகக் கொண்டது நமது அதிஷ்டவசமே எனவும், தமிழ்மொழிக்கு உற்பத்திஸ்தானமாதலானும், யாழ்ப்பாணத் தமிழர்க்குத் தாயகமாதலானும், இந்தியாவின்மாட்டு நீவிர் அபிமான முடையீராயிருத்தல்வேண்டும் எனவும், சகல மதஸ்தர்களும் சமரசப்பட்டு வாழவேண்டிய தவசியம், சமரசபாவத்திற்கு வேண்டிய உபாயங்களைக் கடைப்பிடிப்பது மாணாக்கர்களின் கடமை, மதக் கலகங்களுக்கும், மதத்துவேஷத்திற்கும் இடங் கொடுக்கலாகாது எனவும், பௌத்த மதஸ்தர்களாகிய சிங்களவருடன் ஒன்றுபட்டிருப்பது அத்தியாவசியமெனவும், சிங்களவர்களும் தமிழர்களும் ஒரே நாகரீகமுடையவர்கள், பௌத்த மதமானது சின்னாபின்னப்பட்டு பல்வேறு கதிகளை யடைந்து நிற்பினும், அதற்குக் கர்த்தாவாய பகவான் புத்தர் மேலான ஞானமுடையவரென்றும், அவர் பிறவியில் இந்துமதானுசாரியாகவே இருந்தார் என்றும் இக்கலாசாலையிற் படிக்கும் வாலிபர்களெல்லாம் நல்லவழியிற் பயிற்சிபெற்றுத் தேசத்திற்கு உபகாரிகளாக இருக்கவேண்டுமென்றும் உபதேசித்தனர்.

அதன் பின்னர், அன்னாருடன் வந்த இந்திய மேதாவியாகிய ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமண்யஐய

ரென்பார் எழுந்த மனம் பஞ்சேந்திரியம் தேகம் என்பன பரமேச்வரனால் எமக்கு அளிக்கப்பட்ட மூன்று குதிரைகள் எனவும், அவற்றைத் தீய வழியிற் செல்லவிடாது நல்ல வழியிற் பழக்குவதே இங்கே கற்கத்தக்க பாடம் எனவும், இந்த மூன்று குதிரைகளையும் அவ்வாறு பயிற்றுவதே ஈஸ்வர கைங்கரியம் எனவும், பயிற்றுக்கால் அது சிவத்துரோகமாக முடியும் எனவும், ஆசிரிய மாணவர்கள் தாம் பயிற்சிசெய்யுங்காலத்து தமது மனமுதலியவற்றைப் பயிற்றிக்கொள்வது தமக்குப் பயன்றருவதேயன்றி, கற்பிக்குங் காலத்தில் சிறுவர்களை அவ்வாறு பயிற்றிப் பயன்றருவதற்குங் காரணமாகுமென்றும் குதிரையைச் சிலகாலஞ் சிரமப்பட்டுப் பயிற்றினால், பின்னர் சாரதிக்குச் சிரமமில்லாது தானே நன்கு நடப்பதுபோல, சிலகாலங் கஷ்டப்பட்டு மனம் முதலிய குதிரைகளைப் பயிற்றிவிட்டால் பின்பு அவை சிரமமில்லாமல் தாமே செவ்வனே ஒழுகும் என்றும் விளக்கமாக உபந்நியாசித்தனர். —கடிக.

# கடிதம்.

## சோமவார விரதம்.

உத்தமதேவர்களுள் உத்தமர் சிவபெருமான், உத்தம விரதங்களுள்ளே உத்தமம் சோமவார விரதம் என்று வேத முதலிய நூல்களெல்லாஞ் சொல்லும். இத்துணைச் சிறப்பினதாகிய சோமவார விரதத்தை மேரு மந்தரம் காசி முதலிய தலங்களில் இருந்து நோற்றலால் வரும் பயனினும் மதுரையிலிருந்து நோற்றலால் வரும் பயன் கோடி மடங்கு அதிகமாகும். சிவபெருமான் உமையோடு கூடுதலாற் சோமரெனப் பெயர் பெறுவர். சோமருக்கு உரிய வாரமாதலால், சோமவாரமெனப்படும். இதுபற்றியே மதுரையினிருந்து நோற்றல் விசேடமெனப்பட்டது. இன்னும் அமாவாசையோடு கூடிய சோமவாரம் மிக விசேடமாம். பாவத்துக்கு அஞ்சி நீதிவழியே ஈட்டிய பொருள்கொண்டு நோற்கும் இவ்விரதப்பேறு ஒன்று அநந்தமாய் வளரும். சோமவாரத்திலே உதயந் தொடங்கி இரவிலே கடையாமம் வரையும் அமாவாசி யிருப்பின், அது மூன்றுகோடி சிவராத்திரியோடொக்கும். கடையாமத்தின் அரை நாழிகை இருப்பினும் நன்று.

சோமவார விரதம் கார்த்திகை மாசத்திலேனும் மார்கழி மாசத்திலேனும் மலமாசம் ஒழிந்த மற்றை மாசங்களிலேனும் முதற்சோமவாரந் தொடங்கி நோற்றல்வேண்டும். பானுவாரத்திலே இரவிலே உணவின்றி நிலத்திலே நித்திரைசெய்து, வைகறையிலே எழுந்து மீனாக்ஷியம்மையோடு கூடிய சோமசுந்தரக் கடவுளைத் தியானஞ்செய்து, சௌசம் தந்தசுத்தி முதலிய நித்திய கருமங்களை முடித்து, காம முதலிய குற்றங்களை முற்றக் கடிந்து, ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினாலே ஈரந்துவட்டி, தோய்த்துலர்ந்தனவாய் வெண்ணிறத்தனவாய் உள்ள சுத்த வஸ்திரம் இரண்டு தரித்து, விபூதி உருத்திராக்ஷம் என்னுஞ் சிவசின்னங்களிரண்டையும் விதிப்படி தரித்துக்கொண்டு அநுட்டித்தல்வேண்டும். இதில் உபவாசம் உத்தமம். அது கூடாதவர் ஒருபொழுது இரவிலே போசனஞ் செய்யக்கடவர். அதுவுங் கூடாதவர் ஒருபொழுது பகலே பதினைந்து நாழிகையின்பின் போசனஞ் செய்யக்கடவர். இவ்விரதம் வாழ்நாளளவாயினும், பன்னிரண்டுவருடகாலமாயினும், மூன்றுவருடகாலமாயினும், ஒருவருட காலமாயினும் அநுட்டித்தல்வேண்டும். பன்னிரண்டு மாசத்திலும் அநுட்டிக்க இயலாதவர் கார்த்திகைமாசத்தின்மாத்திரமேனும் அநுட்டிக்கக்கடவர்.

சிவதரிசனஞ் செய்து, மகேசுரபூசைபண்ணி சுற்றத்தாரோடும் பாரணம்பண்ணக் கடவர். பாரணம்பண்ணியபின், பகலிலே நித்திரை செய்யாது சிவபுராணங்களைச் சிரத்தையோடு கேட்டுக்கொண்டு இருக்கக் கடவர். நித்திரை செய்தவர் சற்பிராமணர் நூற்றுவரைக் காரணமின்றிக் கொன்ற மகா பாதகத்தை அடைவர். இந்தச் சோமவார விரதத்தை எந்தவகைப்படி நோற்கச் சங்கற்பித்தாரோ அந்த வகைப்படி வழுவாமல் நோற்றல்வேண்டும்.

விரதம் தொடங்கும்போது இக்கால வெல்லைகளுள் தாம் விரும்பிய காலவெல்லையைச் சுட்டிச் சங்கற்பித்துக்கொண்டு மேற்சொல்லிய நியமம் வழுவாமல் அநுட்டித்தல் வேண்டும். சங்கற்பித்துக்கொண்ட எல்லைமுடிவிலே விதிப்படி உத்தியாபனம்பண்ணல்வேண்டும். வாழ்நாளெல்லைவரையும் சங்கற்பித்து நோற்பவருக்கு உத்தியாபனம் இல்லை. இடையே விடுவோரும் உத்தியாபனஞ் செய்யாதவரும் விரதபலத்தை யடையார். ஆதலால், இடையே விடாது அநுட்டித்து முடிவிலே உத்தியாபனம் பண்ணுக.

இச்சோமவாரவிரதத்தை விட்டுணு பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் பிற கணங்களும் சிரத்தையோடு அநுட்டித்தார்கள். மனிதரும் அநுட்டித்துப் போகத்தையும் மோட்சத்தையும் பெற்றார்கள். இவ்விரதத்தை அநுட்டிப்பவர் பலையும்மனத்துயரமும்நீங்கி, ஆயிரம் பிறவியிற் செய்த பாவங்கள் ஒழியப்பெற்று எடுத்த சரீரத்திற்றானே சிவகதியை அடைவார்கள். இவ்விரதத்தை ஒதினவர்களும் கேட்டவர்களும் பலவியர்களோடும் மக்களோடும் சுற்றத்தாரோடும் இனிது வாழ்ந்து, சுவர்க்கத்திலே பதினாலு இந்திரபதத்திலே வீற்றிருப்பார்கள்.

விரதங்களை அநுட்டிக்கும் சைவசமயிகளுள் அநேகர் விரத தினத்துக்கு முன்னே தாங்கள் உண்டுவந்த மற்ச மாமிசங்களை விடுத்து, விரத தினத்திலே சுத்தர்களாய் விரதம் அநுட்டித்து அப் பழையபடி மாமிசம் புசிக்கின்றார்களே! இவர்கள் விரத பலனையும் இழந்து எரிவாய் நரகத்துக்கும் ஆளாகின்றார்களே. இவர்கள் அறியாமை என்னையோ!

இங்ஙனம்,
S. V. R. M.

## சர்வாலய தீபதரிசனம்.

சிறீ திருக்கைலாசத்தில் பரமசிவன் பார்வதி சமேதராய் வீற்றிருக்கும்போது, ஒருநாள் அங்கேற்றியிருந்த நெய்விளக்குகளில் ஒன்று அணைந்துபோகின்றசமையத்தில் ஓரெலி அபுத்தி பூருவமா யதைத் தன் முகத்தால் தூண்டிப் பிரகாசிக்கச் செய்தது. அதனால் கைலாசபதி மனமகிழ்ச்சியோடு கிருபை கூர்ந்து அவ்வெலிக்கு அவுணசரீரமும் அதிக சம்பத்துக்களையுங் கொடுத்து பூமியிலே பிறக்கும்படி கடாட்சித் தருளினர். அவ்வெலியானது அவ்வநுக்கிரகப்படி மாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்து சகல செல்வங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்குங் காலத்தில் ஒரு நாள் சிவதரிசனத்துக்குப் போகத் தொடங்கித் தனது இராச வரிசையுடனே சிவாலயத்துட் பிரவேசித்துப் பிரதட்சணம் வருகிறபோது, அவ்விடத்தி லேற்றியிருந்த தீபநெய்யில் ஒரு துளி இச்சக்கரவர்த்தியின் உடம்பிலே யொழுகினவுடனே அந்தச் சக்கரவர்த்தியின் தேக முழுவதும் இரணம் (புண்) கண்டு நெடுங்காலம் வருத்தப்பட்டுக்கொண் டிருக்குங் காலத்தில் ஒரு நாள் பரமசிவன் இரக்கங்கொண்டு, சக்கரவர்த்தியே, நீ மிகவும் இராசவாழ்வினாலே யகங்காரங்கொண்டாய், அதனாலே இத்துக்கம் நேரிட்டது. நீ இன்றுமுதல் என்னை உத்தேசித்து நெய் முதலிய பொருள்களால் ஆலயங்களுக்குத் தீபமேற்றிவருவாயானால் உனக்கு இந்தப் புண் வியாதி தீர்ந்து பரமுத்தி கிடைக்குமென்று அசரீரியாகத் திருவுளம் பற்றியதைக் கேள்வியுற்ற சக்கரவர்த்தியானவர் ஆனந்த மடைந்து அந்தக் கட்டளையின்படியே அன்று முதல் சிவாலயங்களிலும் மற்ற இருள் நிறைந்த காட்டிடங்களிலும் விளக்கேற்றிக் கொண்டுவருங் காலங்களில் ஒரு நாள் சிறீ கைலாசபதியான சிவபெருமான் திருவுளமிரங்கிக் கார்த்திகைமீ பூருவபட்சம் கார்த்திகை நட்சத்திரத்தில் உலகமெல்லாம் சோதிமயமாக வெழுந்தருளி அச்சக்கரவர்த்திக்குப் பரமுத்தி கொடுத்தருளினர். அப்போது சிவ தரிசனத்திற்கு வந்திருந்த தேவர்களெல்லாம் அச்சோதியைக் கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உக்கிர உட்டணந் தணியும்பொருட்டுப் பொரியவல் நிவேதனம் பண்ணினார்கள். இவ்வாறு கைலாசபதி மாபலிச் சக்கரவர்த்திக்குச் சோதி வடிவாகத் தரிசனங் கொடுத்த காரணமாகச் சிவாலயங்கள் தோறும் கார்த்திகை மாதம் பூருவபக்கக் கார்த்திகை நட்சத்திரத்தில் தீபம் வைக்கவும் சுட்கப்பனை (சொக்கப்பானை) கட்டவுமாயிற்று. சுட்கப்பனையின் விதி மறுபத்திரிகையில் வெளிப்படும். இத்தீபங்களை சிவபெருமானாகப் பாவித்தல்வேண்டும்.

இங்ஙனம்,
வட்டுநகர் வித்துவான்,
மு. ஆறுமுகம்பிள்ளை.

## இன்னுந் தயவில்லையா?

இந்துசாதன பத்திரிகாசிரியரவர்கட்கு:

ஐயா,

மூன்றுநாலுவருடங்களுக்குமுன் சுருட்டு புகையிலைப்பஞ்சம் இரண்டொரு மாசங்களாக விருந்ததென்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம். அப்பஞ்சத்தின் காரணமாக சுருட்டு விலையேறிற்று. சரி, இப்போதும் அப்பஞ்சமிருக்கின்றதா? இப்போது மவ்விலையேன் பரிபாலனஞ் செய்யப்பட்டு வருகின்றது? இவ்வித நீதியீனம் வியாபாரிக ளநேகரிட மிருக்கின்றது. புடவை இந்தியாவிலும் மற்றவிடங்களிலும் எவ்வளவு மலியாய்விட்டது. இவ்விடத்திலோ வியாபாரிகள் எங்களைக் கொள்ளையடிக்கிறார்கள். இவ்விதமாக அநேக காரியங்களில் எங்கள் பெரியோர் எங்களுக்கு நன்மை செய்யக்கூடியதா யிருக்கின்றது. அப்படி யிருந்தும், இராச சங்கத்திற் போய் அங்கே என்னவோ வெட்டி விழுத்துகிறார்களாம் எங்களுக்காக!

இப்படிக்கு,
தங்கள் ஊழியன்,
தேச மித்திரன்.

யாழ்ப்பாணம்,
10—11—23.

# இந்திய சமாசாரம்.

## பெயர்பெற்ற கொள்ளைக்காரன் பிடிபட்டான்.

6 வருடங்களுக்கு முன்னர் பார்சாத் என்னுமிடத்தைச் சேர்ந்த பிரபல வியாயவாதியாகிய சன்னுபாய் என்பவரைக் கொலைபுரிந்தது முதல் மறைந்துகொண்டிருப்பவனும், செயரா ஜில்லாவிலும் முக்கியமாக பார்சாத் தாலுகாவிலும் கடந்த ஆறு வருடங்களுக்குள்ளாக முறையே 35 கொலைகளும், 55 கொள்ளைகளும் செய்துள்ள பெயர்பெற்ற கொள்ளைக்காரனுமான அலியா சதக்கியாஎன்பவனை செய்ரா ஜில்லா சுப்பரின்டென்டான மிஸ்டர் ஐவ் டபிள்யூ ஓ. ஜார்மன் என்பவர் தமது இரு டெப்பியூட்டி சுப்பரின்டெண்டுகளான கான்பகதூர் வெரியவா, மிஸ்டர் ஜே முதலியவர்களுடனும், சப் இன்ஸ்பெக்டர் சதர்பாய் அமின் என்பவரின் உதவியாலும் ஒட்டார் சாண்டா என்னும் காட்டிலிருந்து உயிருடன் கைப்பற்றினர். அக்கொள்ளைக்காரனைப்பிடிப்பவர்களுக்கு அரசாங்கத்தார் 8000 ரூபா வெகுமதியளிப்பதாக அறிவித்திருந்தனர், அவனிடமிருந்து கைப்பற்றப்பட்ட பல சாமான்களுள் ஒரு துப்பாக்கியும் தோட்டாக்கள் நிறைந்த பையும், தோட்டா நிறைந்த ஆறுகுண்டு கைத்துப்பாக்கியும் இருக்கக் காணப்பட்டன. திராவிடன்.

## மகாத்மாவின் ஜாதகம்.

பீமாவரம் ராமபிரஸாத் ஜோஸ்ய சாலையிலிருக்கும் ஸ்ரீ. வி. சோமசுந்தர ராவ் அவர்கள் மகாத்மாவின் ஜாதகத்தைப்பற்றிய பலன்களை வெளியிட்டிருக்கிறார். அதிற்கண்டுள்ள முக்கிய குறிப்புக்களாவன:—

1. 1923-ம் வருஷம் டிசம்பர்-மீ வரை சனி திசை. அதன் பிறகு புதன் திசையாகையால் மகாத்மா டிசம்பர் 6, 7, 8, 14, 23, 26 அல்லது 27-ம் தேதியில் விடுதலையடையலாம்.

2. அவரது கீர்த்தி எவ்விதத்திலும் குறையாமல், இந்தியாமுழுதிலும் பரவி நிற்கும்

3. எப்படி யிருந்தாலும் 1924-ம் வருஷம் செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு அவர் சிறையிலிருக்க முடியாது.

4. 1924-25-ல் அவரது 56-வது வயது. பிரகஸ்பதி இந்தியாவுக்கும், மகாத்மாவுக்கும் சாதகபாகத்திலிருக்கிறார். ஆகையால் இந்தியாவுக்கு நன்மை யேற்படும் மகாத்மாவின் லக்ஷ்யம் பெரும்பாலும் பலிதமாகும்.

5. 1929-ம் வருஷம் இந்தியாவுக்கும் மகாத்மாவுக்கும், மிகவும் பொருத்தமான வருஷம். இப்பொழுது இந்தியா குடியேற்ற நாட்டு அரசுரிமையை ஸ்தாபிதுக்கொள்ளும். அதன் பிறகு இந்தியாவும் இங்கிலாந்தும் மிகுந்த நேசபாவத்துடனும், சம அந்தஸ்துடனும் விளங்கும். ஸமரஸ போதினி.

## இந்தியப் பெண்மணிகள் வரலாறு.

### II

### பத்மினி.

பரதகண்டத்தின் வடபாகத்திலுள்ள நாடுகளில், மீவார் என்பது பெயர்போன தேசம். அதன் தலைநகராகிய சித்தூர், ராஜபுத்திருடைய செல்வாக்கிற்கு உறைவிடமா யிருந்தது. எட்டு லக்ஷியிகளுடையவும் திட்டமான வாழ்க்கை. அந்நாட்டை ஆட்சிபுரியவேண்டிய மகாராஜா லக்ஷ்மண சிம்ஹன், இளமையாக விருந்ததினால் அவன் மாமன் பீமசிம்ஹன் ஆட்சி நடத்திவந்தான், ஆட்சிபுரியும் வன்மையிலும் ஆயுதமெடுத்துச் சண்டைசெய்வதிலும் அவனுக்கு நிகரானவரில்லை. பொதுஜனங்கள் அரசனை மெச்சினார்கள். நாடுமுழுவதும் சமாதானமும் சந்தோஷமுங் குடிகொண்டன. யாவருடைய புகழுக்கும் அவன் உரித்தானான்.

பெரிய படையெடுப்பில் வடநாடுமுழுவதுங் கொள்ளைசெய்தும், ஆலயங்களை நாசப்படுத்தியும் கலக்கி வந்த அலாவுதின்—படையெடுப்புக் காலத்தில் மதப்பித்தினால் தன் மதத்தைச் சாராதவரைக்கூரிய வாளிற்கு இரையாக்கினான். பல விடங்களுக்குஞ் சென்று சித்தூரையும் நண்ணினான். அணுகியபோது அது ஒருபெரிய வீரமுள்ள படைகளால் காக்கப்படுவதென்றும் அதை வெல்லுவது எளிதல்ல வென்றும், உணர்ந்து கொண்டான் இது வரையிலும் தனக்குக் கிடைத்திருக்கும் மேலான வெற்றியைச் சித்தூரில் பாழாக்க வேண்டாமென உறுதி கொண்டான். ராஜ புத்திருடைய ஆண்மையைக் கண்டு அஞ்சாதவருமுண்டோ?

ஆனால் பீமசிம்ஹன் மனைவி, பத்மினிதேவியின் பேரழகைக் கண்டு அனங்கன் சிலைவளைப்ப ஆசை மேலிட்டால் அவளைக் கொண்டான். நகர மாந்தருடைய உதவியால் காரியம் நடைபெறவில்லை. ஆனாலும் சில உபாயத்தால் முடிக்கலாமெனக் கருதி சேனைகளோடு சித்தூர்க்கோட்டையை வளைந்துகொண்டான். பலத்த போர்நடைபெற்றது. இரவும் பகலும் எப்போதும் ஓய்வில்லை.

பல மாதங்கள் வரையில் ஜனங்கள் மகம்மதியத் தலைவனைத் தடுத்து நின்றார்கள். பொருளைப் பெற்றுப் போரை நிறுத்த வேண்டுமென பீமசிம்ஹன் வேண்டினான். அலாவுதின் அதை ஏற்கவில்லை. சமாதானத்திற்கு பத்மினியாலாகிய ஒரே வழியன்றிப் பல வழிகளில்லையெனக் கூறிவிட்டான். ராஜ புத்திர வீரர் இறைவெறுத்து ஒரே மனமாகக் கண்டித்து மரண காலம்வரையில் சண்டை செய்யத் துணிந்தனர், மனவூக்கம் மற்றவூக்கங்களைவிடச் சிறப்புள்ளதாகையால் அவருக்கு அஞ்சாது தடுத்து நிற்கும் சக்தியுண்டாயிற்று. 12 ஆண்டாகச் சண்டைசெய்து சலித்து, பத்மினியைப் பறிப்பதற்கு வேறு வழியுண்டோவென யோசித்து, ஒரு தூதனை ரஜபுத்திரனிடமனுப்பி பத்மினியின் உருவத்தைக்கண்டால் போதுமெனவும் சமாதானமடையலாமெனவுங் கூறிவரச் செய்தான். ரஜபுத்திரர் பத்மினியின் உருவத்தைக் கண்ணாடி வழியாகக் காண்பிப்பதாகவும், கோட்டைக்குள் வரும்போது குறிப்பிட்ட சிலரோடுதான் வர வேண்டுமென்றும் பதிலிறுத்துவிட்டனர்.

அலாவுதின் ஒப்புக்கொண்டுகண்ணாடியில்காரிகையின் உருவத்தைக் கண்டு களித்தான். பிறகு வீரசிம்ஹனோடு நட்புடையவனேபோல் நடந்துகொண்டான். தன் படை வீட்டைப் பார்வையிட வேண்டுமென பீமசிம்ஹனை வேண்டினான். வஞ்சக்கள்வன் வாக்கில் மயங்கி பீமஸிம்ஹன் இதற்கு ஒப்புக்கொண்டு விட்டான். தன் நண்பர்களோடு அலாவுதினுடைய படைகளைக் காண்பான் போகும்போது, காட்டில் நடுவே சிலர் பீமசிம்ஹனை அவன் கூட்டத்தாரோடு கைதியாக்கினார்கள். இவர் அலாவுதினுடைய ஏவலாளர், அவனுடைய ஆணையினாலேயே இவ்விதஞ் செய்தனர்.

"ரஜபுதிரர்களே! நீங்கள் எங்கள் அரசனுடைய வார்த்தைக்குச் செவி கொடுங்கள். இல்லையேல் பீமசிம்ஹனைக் கொல்வதுடன் உங்களுடன போர்புரிந்து எங்கள் அரசனுடைய அவாவை நிறைவேற்றுவோம்" என ஓர் ஒற்றன வசது சித்தூரில் கூறினான. அப்போது ஆட்சி புரிந்த பத்மினிதேவி ஓர் உபாயம் செய்தாள். அலாவுதின ஏமாந்தான.

தன கணவனை விட்டுவிட வேண்டுமெனறும் தன தோழிகளோடு பாளயத்திற்குச் சென்று முதலாவதாக அவரைப் பார்க்கவேண்டுமெனறும், இதற்குச் சம்மதித்தால் மனைவியாகவிருக்கத் தடையில்லை யெனறும் கூறி ஓர் ஒற்றனை யனுப்பினாள்.

இதை அலாவுதீனும் ஒப்புக்கொண்டான. பத்மினி பல்லக்கில் வருகிறாள், அநேகம் பல்லக்குகளும் அதைத் தொடர்ந்து வருகினறன. பல்லக்குச் சுமப்போர் படைகளை மறைத்து வைத்திருக்கும் வீரர்கள். பத்மினியொழிய மற்றப் பல்லக்கிலிருப்பவரும் போர்வீரர்களே.

அலாவுதின் அகமகிழ்வோடு பத்மினியைகல்வர வேற்றான. அவள் மூடிய பல்லக்கிலிருந்த வண்ணம் தேனொத்த மொழியால் தன கணவனைக்காண அருளவேண்டுமெனக் கேட்டாள். இதற்கு மறுத்துரைப்பாருமரோ? தன கணவனண்டை சென்று தந்திரத்தால் தலைநாள கொண்டுவிட்டிருந்த குதிரைகளின் மீது பத்மினியும் பிரிய நாதனும் ஏறிக்கொண்டு அம்பு பாய்ந்தாற்போல் தன் நாடு அடைந்தனர். ரஜபுத்திரருக்கும் மகம்மதியப் படைக்கும் சண்டை யுண்டானது. ரஜபுத்திரருக்கு வெற்றியில்லை. சேனைக்கதிபதி கோரசிட்மன் மாண்டான். அவன் மகன பன்னிரெண்டு பிராயமுள்ள பதாலனும் அதிபதியாகிய ஜயசீலனும் அபிமன்னியுவைப் போலப் பொருது உயிரை நீத்தார்கள். தன்நாயகனுக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகஞ் செய்த இவ்வரிய செய்கையினாலேயே பரதகண்டத்துப் பல பாஷைகளிலும் இவர் திறனை வாழ்த்துகின்ற பாக்களும் பாடல்களும் மலிந்து வருகினறன.

பீமசிம்ஹனுடைய படைச்செருக்கு குலைந்துவிட்டது. அவன மக்கள் பதினொருவர் உயிர் துறந்தனர். யாவரும் தம் வாழ்வை நாட்டிற்கு ஈந்துவிட வேண்டுமென முடித்துக் கொண்டனர். ஒத்து நின்று உயிரை வெறுத்து யுத்தஞ் செய்யும் ஒரு கூட்டத்தினுடை திறனை விளக்க வேண்டுவதில்லை.

தாம் தோல்வியுற்ற கெட்ட செய்தியை மாலைப்போது கோட்டையினுள் உறையும் வீரத்தாய்மார் அறிந்தனர். அரசி அறிந்தாள். நகர் நடுவே அழல் மண்டி யெரியுங் குழியொன்று உண்டுபண்ணினார்கள். அரசி நகரமாதர்களோடும் தோழியரோடும் வந்தாள். நெருப்பினை வலம்வந்து நளிநீர்ப் பொய்கையில் நல்லன்னஞ் சார்ந்தாற்போல் ஒருவர்பின் ஒருவர் சாடினார்கள். சிந்தையின தெளிவெனனே! செய்கையின திறனென்னே! தனமதிப்பே, உனது பெருமையே பெருமை! நீ நீடூழிவாழ்க.

ஓ! வீரத்தாய்மார்களே! உங்கள் குழந்தைகளாமெங்களுக்கு வீரமில்லை, விழிக்கின்றோம் தனமதிப்பில்லை தவிக்கின்றோம்! ஒற்றுமையின்றி ஒடுங்குகின்றோம்! உங்கள் நல்லாசியுண்டாவதாக! நாட்டிற்கு உழைக்கும் நாரியர் பலருண்டாக! நாடுநலம்பெற்றுயர்க!

—"நவசக்தி"

## ஏகாதிபத்தியத்தில் இந்தியரின் நிலைமை.

### டாக்டர் தேஜ் பஹதூர் ஸாப்ருவின் உபந்நியாசம்.

இந்தியாவை முக்கியமாகப் பாதிக்கும் ஒரு விஷயத்தைப்பற்றி விரிவாக எடுத்துப் பேசச் சந்தர்ப்பங் கொடுத்ததற்காக எல்லோருக்கும் நன்றி பாராட்டுகிறேன். இந்தியாவுக்கு அது ஜீவாதாரமான பிரச்சினையாகும். பொறுமையுடன் எனது பிரசாரத்தை நீங்கள் கேட்கவேண்டும். தனியாக ஒரு தினத்தை இந்தியாவுக்கென்று ஒதுக்கிவைத்ததுபற்றி நான் சந்தோஷப்படுகிறேன். இந்தப்பிரச்சினை முக்கியமானதென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரே உணர்ந்திருப்பதாக அதிலிருந்து நான அனுமானிக்கிறேன். குடியேற்றநாட்டு மந்திரிகளும் பிரிட்டிஷ்கவர்ன்மென்டாரும் இப்பிரச்சினையை முக்கியமானதென்று கருதுவதாக இந்தியருக்குத் தோன்றும்பட்சத்தில் அதுவே இந்தியருக்கு ஓர் ஆறுதலையுண்டுபண்ணும். இந்தியா மந்திரி சற்றுமுன்செய்தபிரசங்கம் எனக்குமிகுந்தசந்தோஷத்தையளிக்கின்றது. எனது தேச மக்களும் அப்பிரசங்கத்தைப் படித்துத் திருப்தியடைவார்களென்பது திண்ணம். எங்களுடைய தேச கௌரவத்தைக் காப்பதற்கான ஒரு விஷயத்தில் இவ்வளவு தூரம் இந்தியா மந்திரி ஐக்கியப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். நான் சண்டை போடுகிறவனென்று உங்களிற் சிலர் நினைத்தாலும் நினைக்கலாம். ஆனால் அக்கண்டனத்தை நான் பொருட்படுத்த மாட்டேன். எனது தேசத்துக்காக நான் சண்டை போடுகிறேனேயன்றி வேறில்லை அது ஸத்தியம். குடியேற்றநாட்டு மந்திரிகள் தங்கள் நாட்டுக்காகச்சண்டைபோட்டதுபோல் நானும் ஏன் சண்டைபோடக்கூடாது? சண்டை போடத்தான் போகிறேன்.

நான் ஜோர்ஜ் மன்னருடைய பிரஜைகளில் ஒருவன். அவருடைய வீட்டில் தங்க எனக்கும் உரிமையுண்டு. அவருடைய லாயத்தில் இடங்கொடுப்பதாகச் சொன்னால் எனக்குத் திருப்தி யேற்படாது. வெளிநாட்டு இந்தியர் பிரச்சினை மிகவும் முக்கியமான விஷயம். இந்தியாவுக்கு மட்டுமல்ல, ஏகாதிபத்தியத்துக்கும் அது ஜீவாதாரமான விஷயம். எங்களுக்கு சுய ஆட்சி கிடைத்திருக்கவில்லையாயினும் அந்த மனப்பூர்வமான லட்சியம் நிறைவேறுவதற்கு எவ்வளவு காலமானபோதிலும் வெளிநாட்டு இந்தியர் விஷயத்தில் நாங்கள் எல்லோரும் ஒன்று. எங்களுக்குள் சண்டைகள் பல இருக்கலாம். எங்களில் பலர் மிதவாதிகள், பலர் அமிதவாதிகள்; ஒத்துழையாதாரும் இருக்கிறார்கள். ஹிந்துக்கள் முகமதியர் என்ற இரு சமூகத்தார் இருக்கிறார்கள். ஆனால் வெளிநாட்டு இந்தியரைப் பாதிக்கும் பிரச்சினையில் எங்களுக்குள் அபிப்பிராயபேதமேயில்லை. இங்கு சில பத்திரிகைகள் என்ன எழுதுகின்றன என்பதைப் பார்த்து தவறான அபிப்பிராயம் கொண்டுவிடாதீர்கள். எங்கள் சாதியார் எந்த நாட்டிலிருந்தால் தானென்ன? அவர்களிடத்தில் எங்களுக்கு அபிமானமில்லையென்று நீங்கள் நினைத்துவிடக்கூடாது. கௌரவக் குறைவாக அவர்களை நடத்துவதாகவிருந்தால் அதை நாங்கள் சகிக்கமாட்டோம். எங்கள் உணர்ச்சியை ஒரே வார்த்தையில், எங்கள் தேச பாஷையில் நான் தெரிவிக்க விரும்புகிறேன், லார்டு கர்ஜனுக்கும் ஆள்வார் மகாராசாவுக்கும் அதன் அர்த்தம் புரியும். 'இஸாத்' என்பதுதான் அந்த வார்த்தை தங்கள் மானத்தையுங் கௌரவத்தையும் பெரிதாகக் கருதாத இந்தியரே இல்லை. மானத்தை இழப்பதைவிட மரணமே உத்தமம் என்று இந்தியர் கருதுவர். 'உயிரைவிட மானம் பெரிது' அதுதான் எங்கள் சுபாவம். இந்தியா இல்லாமல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமேது? இந்த உண்மையை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அதைக்கண்டு நான் பெருமையடைகிறேன். குடியேற்றநாடுகளின் அந்தஸ்தை நான் சிறுமைப் படுத்துவதாக நீங்கள் நினைக்கவேண்டாம். உண்மையில் எங்கள் நாடுதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஏகாதிபத்தியமாக்குவது. மனித சாதியாரில் 5-ல் ஒரு பாகத்தவர் இந்தியர். மகத்தான நாகரிகத்தைப் படைத்தவர். உங்கள் நாகரிகத்தைவிட அது புராதனமானது. ஜார்ஜ் மன்னரை எங்கள் சக்கிரவர்த்தியாகக் கொண்டாடுகிறோம். எங்கள் பக்தி உண்மையான ராசபக்தி. அதை என்றைக்கு அழிக்கின்றீர்களோ அன்றே உங்கள் ஏகாதிபத்தியம் ஆட்டங்கண்டுவிடும். அதன் முடிவு என்ன ஆகுமென்பதை நான் சொல்லவும் வேண்டுமா?

ஏகாதிபத்தியத்துக்கு உயர்தர ஆலோசனை சபையாக இந்த மகாநாடு அமைந்திருப்பதால் பரஸ்பரம் ஏகாதிபத்தியத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் சமரச உணர்ச்சியுண்டுபண்ணுவது இம்மாகாணத்தின் கடமை. அக்கடமையை நிறைவேற்றாத வரையில் இந்த மகாநாட்டைக் கூட்டுவதனால் என்ன பயன்? பட்சபாதமோ, துவேஷமோ இல்லாமல் இந்தப் பிரச்சினையை நீங்கள் கவனிக்க வேண்டும். உள்ளதை ஒளிக்காமல் விட்டுச் சொல்லவேண்டிய இடமிது. மறைத்துப் பேசுவது ராசத்துரோகமாகும். ஏகாதிபத்தியத்துக்கும் அது துரோகம் செய்வதாகும். என்னுடைய பலமான உணர்ச்சியை உங்கள்முன் தெரிவிக்கும்போது பலமான வார்த்தைகளைப் பிரயோகிக்க நேரலாம். எனது தேச மக்களின் உணர்ச்சியைத் தெரிவிக்கும்போது என் மனங் கொதித்தது. ஏதாவது பேசலாம், தவறாக அர்த்தங்கொள்ளாதிருக்கும்படி குடியேற்ற நாட்டு மந்திரிகளை கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வெளிநாட்டு இந்தியர் விஷயத்தில் இந்தியாவிலுள்ளவருக்கு ஆழ்ந்த உணர்ச்சி இருந்துவருகின்றது. அவ்வுணர்ச்சி யில்லாத இந்தியர் இல்லை. ஓர் இந்தியர் என்றமுறையில் நான் இந்தியா மந்திரியின் வாதத்தைத் தாங்கிப் பேசுகின்றேன். இந்தியாவின் பொதுவாழ்வில் நான் 27 வருஷமாகப் பங்கெடுத்துவந்தவன். 13 வருஷகாலம் சட்டசபைகளில் வேலைபார்த்தவன். ராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபையிலும் மந்திரியாயிருந்து வேலை பார்த்திருக்கிறேன். இந்தியாவில் இப்போது நான் பார்க்கும்காட்சியை என்றைக்குமே கண்டதில்லை. 5 வருஷங்களுக்குமுன்கூட இப்படியில்லை. படித்தவர்களுக்கும் ஜனத் திரள்களுக்கும் வெகு தூரமென்று 5 வருஷங்களுக்குமுன் நீங்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் இப்பொழுது நிலைமை வேறு. ஜனத்திரள்களுக்குப் படித்தவர்கள்தான் இப்போது வழிகாட்டுகிறார்கள். படித்தவர்களின்பேச்சை ஜனத்திரள்கள் கேட்கின்றன; அதன்படி நடக்கின்றன. இந்தியா வெகுசீக்கிரத்தில் மாறிவிட்டது. இந்தியாவில் —தான் இப்போது பெரிய விசேஷம். படிப்பாளிகள் கிளர்ச்சிக்காரரென்று அவர்களைக் கூப்பிட்டாலும் சரி—ஜனத்திரள் விஷயத்தில் செல்வாக்குப் பெற்றுவிட்டார்கள். படித்தவர்கள் இன்றைக்கு ஒன்று நினைத்தால் ஜனத்திரள்களுக்கு நாளையதினமே அந்த நினைப்பு உண்டாகிவிடுகிறது. ஜனத்திரள்கள் தான்குடியேற்ற நாடுகளுக்குப் போயிருக்கின்றவர்கள். எனதுமாகாணத்திலிருந்து ஏராளமானபேர்கள் குடியேற்ற நாடுகளுக்குப் போயிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுடைய உணர்ச்சி எனக்கு நன்றாகத்தெரியும். கிளர்ச்சிக்காரர்களை நீங்கள் கண்டிக்கலாம்; படித்தமக்களை நீங்கள் கண்டிக்கலாம். ஆனால் ஜனத்திரள்களிடத்தில் அவர்களுக்குஏற்பட்டுள்ளசெல்வாக்கைநீங்கள் மறந்துவிடக்கூடாது. தேசபாஷைப் பத்திரிகைகளுக்குவரவரச்செல்வாக்குவளர்ந்துவருவதை நீங்கள் கவனிக்கவேண்டும். தேசபாஷைப் பத்திரிகைகளின்நடத்தைஎந்தச்சமயத்திலும் சரியானதென்று நான் சொல்ல வரவில்லை. தேசபாஷைப் பத்திரிகைகளைக் கிராமத்தார் மும்முரமாகப் படிக்கஆரம்பித்துவிட்டதையும், கிராமந்தோறும் அறியாதவர்களுக்குப் படித்தவர்கள் பத்திரிகைகளை வாசித்துக் காட்டுவதையுந்தான் இங்கு குறிப்பிடவந்தேன். தேசபாஷைப் பத்திரிகைகளை நான் வாசிப்பதுண்டு. கடுமையான பாஷைப்பிரயோகம்செய்து அவை எழுதுவதை நான் ஆட்சேபிக்கிறேனாயினும், வெளிநாட்டு இந்தியர் விஷயத்தில் அவை கொண்டுள்ள ஆத்திரத்திற்கு அளவில்லை. கிராமத்தாரிடையே அந்த உணர்ச்சி இப்போது நெடுகப் பரவியிருக்கின்றது. எங்கேயாவது இந்தியரை அவமதித்தால் இரும்பைக் காய்ச்சிவிடுவதுபோல் அது எங்கள் ஹிருதயத்தைக் கொதிக்கச் செய்கின்றது. ஆகையால் தெய்வத்தின்மேல் ஆணையிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; நீங்கள் நியாயம் செய்தாலும்சரி இல்லாவிட்டாலும்சரி, நான் சொல்லுவதெல்லாம் ஆபாஸமான பொய்யென்று மாத்திரம் கருதவேண்டாம். நான் சொல்லியது அவ்வளவுமே ஸத்தியம். எங்கள் ஜாதியின் பெருமைக்கும் எங்களிடையே தோன்றியுள்ளபுதிய உணர்ச்சிக்கும், வெளிநாட்டு இந்தியரின்மானபங்கம் சகிக்க முடியாததாயிருக்கின்றன. எங்குபார்த்தாலும் அஃது எங்கள் மனதை வாட்டுகின்றது. இந்தியா கவர்ன்மெண்டின் நிலைமை நாளுக்குநாள் ஸங்கடமாகிக் கொண்டு வருகிறது. சிலமாதங்கள் முன் வரையில் நான் இந்தியா கவர்ன்மெண்டில் வேலைபார்த்துவந்ததால் எனக்கது பிரத்தியட்சத்தில் தெரியும்.

கெனியா விஷயத்தில் நீங்கள் செய்த முடிவைக்கண்டு இந்தியாவெங்கும் மனத்தாங்கலுண்டாயிருக்கிறது. கெனியா இந்தியரின் நிலைமை விருத்தியடைந்து விட்டதாக உத்தியோகதோரணையில் சொல்லப்படுகிறதாயினும், எங்களுடைய அபிப்பிராயம் அதன்று, அற்ப விஷயங்களுக்காக நாங்கள் போராடவில்லை. ஒரு பெரிய கொள்கையை யுத்தேசித்தே நாங்கள் போராடினோம். ஒரு பெரிய பரீட்சை உங்களுக்கு வைத்தோம். ஆனால் நீங்கள் பிசகு செய்துவிட்டீர்களென்றே எனது நாட்டார் நினைக்கிறார்கள். என்னுடைய நாட்டாராவது எங்கள்நாட்டு கவர்ன்மெண்டாவது கெனியாத் தீர்மானத்தை முடிவானதாகக் கருதவில்லை; கருதமாட்டார்கள். ராஜீய விஷயத்தில் எந்த முடிவுதான் சாசுவதமானது? பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்த அம்சத்தை ஒப்புக்கொண்டு, கெனியா முடிவு சாசுவதமானதல்ல வென்பதைத் தெளிவாகத் தெரிவித்து விடுவார்களென்று நம்புகிறேன். ராஜப்பிரதிநிதி முதல் ஜனத்திரள்கள் ஈறாக, எவருக்குமே இந்தக் கெனியா மானபங்கம் சகிக்கக் கூடாததாயிருக்கின்றது. வெளிநாட்டு இந்தியர் விஷயத்தில் அபிப்பிராய பேதமேயில்லை. இரண்டு வருஷகாலம் பிரபல ராஜதந்திரியாகிய லார்டு ரீடிங்குடன் நான் ஒத்துழைத்திருக்கிறேன், என்றைக்காவது ஒருநாள் எனது தேசத்தார் அவருடைய நியாயபுத்தியைப் பாராட்டுவார்களென்று நம்புகிறேன். கெனியா முடிவு தெரிந்தவுடன் லார்டு ரீடிங் மிக்க ஏமாற்றமடைந்து இந்தியா சட்டசபையில் தமது திடமான அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட்டார். சென்ற சில தினங்களாக எனக்கு வந்துகொண்டிருக்கும் தந்திகளிலும், கெனியா விஷயமாய் இந்தியருக்குள்ள உணர்ச்சி நன்கு வெளிப்படுகின்றது. எதிர்பாராத விடங்களிலிருந்துகூட எனக்குத் தந்திகள் வந்திருக்கின்றன. எல்லாவகையான ராஜீய அபிப்பிராயமுடையவர்களும் தந்தி அனுப்பியிருக்கிறார்கள். மகா கனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் அனுப்பியுள்ள தந்தியில் எனது பிரேரணையை ஆதரித்திருக்கிறார். என்ன ஆகுமோவென்ற சந்தேகத்துடனே அவர் இருக்கிறாரென்றும் தெரிகிறது. நான் ஸ்வராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவனன்று; என்னுடைய அபிப்பிராயத்தையும் அது ஆதரிக்கவில்லை; எனக்கு அக்கட்சி ஆதரவளிக்குமென்று நான் எதிர்பார்க்கவுமில்லை. ஆனால் ஸ்வராஜ்யகட்சிக் காரியதரிசியும் தலைவருமான ஸ்ரீமான் என். ஸி. கேல்காரிடமிருந்து எனக்கு ஒரு தந்தி வந்திருக்கின்றது, கெனியா இந்தியருக் கிழைத்த பிழையை நீக்க எந்தப் பலமான நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும் அதற்காதரவளிக்கத் தயாராயிருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார். (என்று சொல்லி தந்தியை வாசித்தார்.) அநேகம் தந்திகள் இவ்வாறு எதிர்பாராத விடங்களிலிருந்து கிடைத்திருக்கின்றன. 5 வருஷங்களுக்கு முன்வரையில் என்னுடன் ஒத்துழைத்து, பிறகு பிரிந்துபோன பண்டித மதன்மோகன்மாளவியா என்ற ஒத்துழையாமைக்காரர், நாற்பது வருஷமாக பொதுநல ஊழியஞ்செய்தவர், எனக்கு ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார். இந்தியரின் ஜீவாதாரமான உரிமையை ஏகாதிபத்திய மகாநாடு மறந்துவிட்டால், இம்மகாநாடு வெறும் வேஷக்கார மகாநாடுதான் என்றும், ஆழ்வார் மகாராஜா உள்ப்பட நாங்கள் மகாநாட்டிலிருந்து விலகிவிடவேண்டுமென்றும் மாளவியா வற்புறுத்தியிருக்கிறார். மிஸஸ் பெசண்டினிடமிருந்தும் 2தந்திகள் வந்துசேர்ந்திருக்கின்றன. அவருடைய கட்சியை நான் சேர்ந்தவனன்று; ஆயினும் எனக்கு ஆதரவு அளித்திருக்கின்றார். இந்தியாக் கவர்ன்மெண்டினிடமிருந்து எனக்கு வந்த தந்தியில் கெனியா முடிவுக்காக பிரிட்டிஷ்சாமான்பஹிஷ்காரத் தீர்மானம் பம்பாய் நகரசபையில் நிறைவேறியிருப்பதைக் குறிப்பிட்டு, பூனாப் பொதுக்கூட்ட மொன்றிலும் அதேமாதிரி தீர்மானமாயிருக்கிறதென்றும், ஆகையால் அனுகூலமானமுடிவுஏற்படுமென்று நம்புவதாயும், இல்லாவிடில் இந்தியா தனது உரிமையைப் பாதுகாக்கப் பழைய கொள்கையை மாற்றிக்கொள்ள உரிமையுண்டென்பதை நான்வற்புறுத்தவேண்டுமென்றும், தென்னாபிரிக்காவில்இந்தியரைஒதுக்கிவைப்பதென்றமுறை கூடாதென்று ஜெனறல் ஸ்மட்ஸுக்குவற்புறுத்தப்படவேண்டுமென்றும் கண்டிருக்கிறது. எனவே வெளிநாட்டு இந்தியர் பிரச்சினையில் அபிப்பிராயபேதமே யில்லையென்பதை உங்களுக்கு வற்புறுத்துகின்றேன்.

15 லட்சம் இந்தியர் இப்போது குடியேற்ற நாடுகளில் வசிக்கிறார்கள். ராஜீயபொருளாதாரக் கஷ்டங்களுக்கு அவர்கள் ஆளாயிருக்கின்றனர். நியூஸீலண்டில் இந்தியருக்கு சம உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியா இந்தியருக்கு அதிகமான குறைகள் இல்லை. ஓட்டுரிமை அவர்களுக்கு சீக்கிரத்தில் கிடைத்துவிடுமென்று நம்புகிறேன். கனடாவில் 1200-க்கு சற்று அதிகமான இந்தியர் இருக்கிறார்கள். தென்னாபிரிக்காவில்தான் இந்தியரின் நிலைமை முழு மோசம். லட்சத்து 64 ஆயிரம் இந்தியர் அங்கு இருக்கிறார்கள். அநேகமாக பெரும்பாலர் கேப்காலனி மாகாணத்தில்தான் வசிக்கிறார்கள். நேடாலில் சட்டசபைக்கு ஓட்டுரிமை கிடையாது. முனிசிபல் ஓட்டுரிமையும் போய்விடும்போ லிருக்கிறது. டிரான்ஸ்வாலில் எவ்விதமான ஓட்டுரிமையும் இந்தியருக்கில்லை. இவை தவிர பொருளாதாரக் கஷ்டங்கள் பல இருக்கின்றன. நகரங்களில் நேடால் இந்தியர் நிலம் வாங்க முடிவதில்லை. டிரான்ஸ்வாலிலும் அப்படித்தான். தங்கப் பிரதேசத்தில் நிலமே வைத்திருக்கக் கூடாது. வியாபார லைசன்ஸ் விஷயத்தில் கேவலமான நிர்ப்பந்தங்கள் விதிக்கப்படுகின்றன. நகர்ப்புறங்களில் இந்தியரைக் கட்டாயப்படுத்தி ஒதுக்கி வைக்க சட்டம் செய்ய உத்தேசமிருந்துவருகிறது. இந்தியர் புதிதாய்க் குடியேறுவது நின்றால் மற்றப்படி இந்தியருக்குக் குறைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளலாமென்று இதே இடத்தில் 1917-ம் வருஷத்தில் ஜெனரல் ஸ்மட்ஸ் சொன்னார். தென்னாபிரிக்கா இந்தியர் மிகவும் நல்ல பிரஜைகள் என்று மிஸ்டர் பர்டன் சொல்லியிருப்பதையும், மனிதர்களைப்போல் இந்தியரை நடத்தவேண்டுமென்று அவர் சொல்லிப் போனதையும் நீங்கள் கவனிக்கவேண்டும்.

பிரிட்டிஷ் கயானா இந்தியரின் நிலைமை அவ்வளவு கேவலமாயில்லை. பிஜியில் குறைகள் இன்னும் இருந்துவருகின்றன. அவை நீங்காவிடில் தாயகத்துக்கு அவர்களை அனுப்பிவிடவேண்டுமென்று எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. தலைவரி விதிப்பதை நிறுத்தியாகவேண்டும். நிலங்கள் வேண்டுமென்றும் பிஜி இந்தியர் கேட்கிறார்கள். கெனியாவில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை இந்தியர் விரும்பவில்லை. பொதுவான ஓட்டர் ஜாப்தா தயாரிக்கவேண்டும். குடியேறுவதில் நிர்ப்பந்தங்கள் நீக்கவேண்டும். நிர்ப்பந்தங்களைக் கடுமையாகக் கையாளக்கூடாது. தங்கநிகாவை எனது நாட்டார் பிரிட்டிஷாருக்கு சம்பாதித்துக் கொடுத்தும், அங்குள்ள இந்தியருக்கு குறைகள் இருக்கின்றன. குடியேற்ற நாட்டு மந்திரி இதையெல்லாங் கவனித்து நிவர்த்தி செய்யவேண்டும். அதிகாரப் பத்திரம் பெற்று ஆளப்படுந் தேசங்களில் இந்தியர் இதற்குமுன் என்ன அந்தஸ்துப் பெற்றிருந்தார்களோ அதற்கு எள்ளளவும் அந்தஸ்து குறையக்கூடாது. பிறநாடுகளுக்கு இந்தியரை அனுப்பக்கூடாதென்ற உணர்ச்சி எனது நாட்டில் இப்போது பலமாயிருக்கின்றது. கூலிக்காரராக இந்தியர் கருதப்படுவதில் எங்களுக்குச் சம்மதமில்லை. இதுவரை ஏற்பட்ட அவமானம் போதும். எங்கள் சொந்த தேசத்திலேயே அவர்களுக்கு வேலை இருக்கின்றது. ஆகையால் அதிகமாக இந்தியர்கள் குடியேற வந்துவிட்டால் என்ன செய்வதென்று எந்தக் குடியேற்ற நாடும் பயப்படவேண்டியதில்லை. 1921-ம் வருஷத்திய சம அந்தஸ்து தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவருவதில் உங்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை நான் அறிவேன். அதுபோல் எனது கஷ்டங்களையும், எனது நாட்டாரின் கஷ்டங்களையும் நீங்களுணர்ந்து தாராள மனதுடனும் ராஜதந்திரத்தோடும் நடந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். (வரும்)

—"சுதேசமித்திரன்".


யாழ்ப்பாணம்

## சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | ௧0 |
| இரண்டாம் பாலபாடம் ,, | ௧௫ |
| மூன்றாம் பாலபாடம் ,, | ௨0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ௪0 |
| ஆறாம் பாலபாடம் .... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி எட்டாம் வகுப்பினும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிபிகேற்"வகுப்பினும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது. விளக்கத்துடன் | ௭௫ |
| கலாமஞ்சரிவிளக்கம்(மாத்திரம்) | ௩0 |
| கிருட்டிணன்றூது, உரையுடன் | ௮௫ |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)... ... ... | ௧௨ |
| இலக்கண வினாவிடை... ... ... | ௧0 |
| நிகண்டு ௧௧-வதும் ௧௨-வதும் ... | ௨௫ |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | ௨௫ |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் ... ... ... | ௧-௨௫ |
| றவ்காகிதம்... ... ... ... | ௧-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | ௧0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | ௧௨ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | ௧௨ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | ௧0 |
| இந்துசமயம் தாவரஜீவியாயிருத்தலேன்? ... ... ... ... ... | ௧0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௬ |
| குமணசரித்திரம் ,, | ௬ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | ௧0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | ௧0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப் பெற்றது... ... ... ... ... | ௧௫ |
| மறைசையந்தாதி ... ... ... | ௨0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

சபையாராலச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்றனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளையுடைய கடையிலும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை,


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.